**TAMIL**

## ப்ரியோடெர்மின்® க்ரீம் ஷாம்பு பயன் முறை அறிவுறுத்தல் படிவம்
### ப்ரியோடெர்மின்® பயன் முறைத் தகவல்கள்

ஒருவர் எவ்வளவு சுகாதாரம் சுத்தத்தை கடைபிடித்தாலும் குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும் பேன் எப்படியோ தொற்றிப் பரவுகிறது. தலையில் பேன் இருப்பது அவமானத்திற்குரியது இல்லையென்றாலும், அது இருப்பதால் தொல்லையும் அசௌகரியமும் உண்டாகிறது.

பேனை முறியடிக்க உபயோகப்படும் மருந்து நல்ல பலனளிக்கும் வகையில் செயல் புரியும் அதே சமயம் மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்ட ஒன்றாகவும், மிருதுவானதாகவும் இருப்பது அவசியம். ப்ரியோடெர்மின்® க்ரீம் ஷாம்பு மருத்துவரீதியாக நிரூபிக்கப்பட்டதோடு பேனையும் ஈரையும் விரட்டுவதற்கு வேண்டிய சகல தன்மைகளையும் உள்ளடக்கிய நவீன பூச்சிகொல்லிமருந்தாகும். இதில் மாலதியான் அதி ஆற்றல் புரியும் பகுதிப்பொருளாக உள்ளது. மாலதியான் பேன்களுடன் தொடர்பு கொண்டு வினை புரியும் நஞ்சானதால் அது பேனின் நரம்பு மண்டலத்தைத் நாசமாக்கி அதை அழிக்கிறது. எந்த அளவிற்கு வினையாற்றும் பகுதிப்பொருள் உள்ளதோ அந்த அளவிற்கு அது விரைவாக பேனை அழித்துவிடும். மிகக் குறுகிய நேரத்திலேயே பேன் ஒழிந்து விடும். இந்த சிகிச்சைக்குப்பின் ஓரிரு பேன் தப்பிப் பிழைத்தாலும் கூட அவை மிகவும் பாதிப்படைந்து இனவிருத்தி செய்யமுடியாமல் அடுத்த சில தினங்களிலேயே மடிந்துவிடும்.

பேன்களும், உயிருள்ள ஈர்களும் தலையின் மிக அண்மையான தோல் பகுதியில் இருக்கின்றன. தலையின் தோலிலிருந்து 1 செ.மீ. அளவான தூரத்தில் ஊயிருள்ள மற்றும் செத்த ஈருகள் நம் தலையிலுள்ள முடியில் ஒட்டி இருக்கும். உங்களுக்கு நீண்ட முடியிருந்தாலும் நீங்கள் ப்ரியோடெர்மின்® க்ரீம் ஷாம்புவை மற்ற ஷாம்புவைப் போல முழுத் தலைமயிரையும் நுரைக்க விட்டுக் கழுவ வேண்டியதில்லை. முடிந்தளவு தலையின் மிக அண்மையான தோல் பகுதியிலேயே மேற்படி ஷாம்புவை நன்றாகப் பிரயோகிக்கவும். முக்கியமாக், தலைமயிருள்ள முழுத் (தலையின் மிக அண்மையான) தோல் பகுதியும் மேற்படி ஷாம்புவால் கையாளப்படுவதுடன், முக்கியமாகக் காதுகளின் பின்புறம் மற்றும் பிடரிப்பகுதி போன்றனவும் கையாளப்படவேண்டும்.

ஈர் அல்லது பேன் முட்டை உயிரோடு இருந்தாலும் செத்திருந்தாலும் அவை முடியுடன் ஒட்டியே யிருக்கும். அவற்றை மெல்லிய முடியிலிருந்து பிரித்தெடுப்பது மிகவும் கடினம்.

**ப்ரியோடெர்மின்® க்ரீம் ஷாம்பு எப்படி உபயோகிக்கப்படுகிறது?**

முதலில் சாதாரண கண்டிஷனிங் ஷாம்பு பயன்படுத்தி தலை முடியை அலசுங்கள். பின்னர் ஈர் உள்ளதா என்று ஈருளி (பேன் சீப்பு) கொண்டு சோதித்துப்பாருங்கள். இம்முறையில் அவை சுலபமாக கண்களுக்குத் தென்படும்.

தொடர்ந்து இதே முறையில் முடிந்தால் தினமும், சோதித்துப்பாருங்கள். ஈருகளை உறுவுங்கள் (விரலாலும் உறுவியெடுக்கலாம்). உங்கள் தலையில் உயிருடன் பேனிருந்தால் மட்டுமே பேன் கொல்லியை உபயோகியுங்கள்.

**ப்ரியோடெர்மின்® க்ரீம் ஷாம்பு எப்படி பயன்படுத்தப்படுகிறது?**

1. உங்கள் முடியை வெதுவெதுப்பான நீரில் நனையுங்கள். மிகுதியான நீரை பிழிந்தெடுங்கள்.
2. முடியின் தன்மையை பொறுத்து அரை அல்லது ஒரு மேசை கரண்டி அளவிற்கு (சுமார் 15ml) ப்ரியோடெர்மின்® எடுத்துக்கொள்ளவும்.
3. உங்கள் தலையிலுள்ள மயிர்கால்கள் முழுவதிலும் தேயுங்கள். அதிகம் நுரைக்கவிட வேண்டாம்.
4. பின்னந் தலை முடியையும் காதின் பின்புற முடியையும் நன்றாக சேர்த்துத் தடவுங்கள்.
5. சுமார் 10 நிமிடங்கள் ஊறவிடுங்கள்.
6. வெதுவெதுப்பான நீரில் முடியை நன்றாக அலசவும். பின்னர் டவல் கொண்டு லேசாகத் தட்டி காய விடுங்கள்.
7. ஈரமாக இருக்கும் போதே உங்கள் முடியிலிருந்து பேனையும் ஈரையும் ஈருளியால் அல்லது பேன் சீப்பால் வாரி யெடுங்கள்.
8. உங்கள் முடி தானாகவே காற்றில் இயற்கையாக உலரட்டும் (வெப்பமில்லாமல் அதாவது ஹேர்டிரையர் இல்லாமல்)

சிகிச்சை ஆரம்பித்த 7வது மற்றும் 14வது நாட்களில் இதே முறையில் சிகிச்சையை தொடருங்கள். (உ.ம். முதல் சிகிச்சை சனிக்கிழமையில் துவங்கியிருந்தால் எதிர்வரும் இரு சனிக்கிழமைகளிலும் தொடருங்கள்). சிகிச்சைக்கு இடைபட்ட நாட்களில் சாதாரண கண்டிஷனிங் ஷாம்புவால் முடியை அலசுங்கள் ஈருளி கொண்டு முடியை வாருங்கள். முழு பேன் நிவாரண உத்திரவாதம் 3வது முறைக்குப்பிறகு (0,7 மற்றும் 14 நாட்களில்) மொத்த ஈருகளையும் உறுவியபின்னரே கிடைக்கும்.

**முக்கிய குறிப்புகள்:**

ஒரு தலையுடன் மற்றொரு தலைக்கு நேரடியான தொடர்பு வந்தால் தான் தலைப்பேன் தொற்றுகிறது. அடுத்தவர் தொப்பி, சீப்புகளை பயன்படுத்துவதால் எப்பொழுதாவது தொற்றுகிறது. பேன் முடியை விட்டு தானாகவே நீங்கினால் தான் எந்த ஆபத்தும் இல்லை என்று ஆய்வுகள் காட்டுகின்றன. இதற்காக படுக்கை உறையை தினமும் மாற்றவோ உரோமப் பொம்மையை 24 மணி நேரமும் உரைபதனத்தில் வைக்கவோ தேவையில்லை.

பேனை பரபரப்பான விஷயமாக்க வேண்டாம். தேவைப்பட்டால் துவைக்க முடிந்த பொருட்களை 60°யில் ஒரு முறை துவைக்கலாம். பொருளை வாக்குவம் கிளினரால் சுத்தப்படுத்தலாம் அல்லது இரு தினங்களுக்கு பயன்படுத்தாமல் இருக்கலாம். பேனால் குதிக்கவோ, பறக்கவோ முடியாது. பேன், நம்முடைய செல்லப் பிராணிகளிடமிருந்து தொற்றவோ, நீச்சல் குளத்தின் மூலமாகவோ பரவமுடியாது. எனவே உங்கள் கவனத்தை சுற்றுப்புறத்தை விடுத்து, உங்கள் தலையில் வைக்குமாறு பரிந்துரைக்கிறோம். உங்களுக்கு கிடைக்கும் நேரத்தை ஈர் உள்ளதா என்று சோதித்து பாரத்து அவற்றை நீக்கப் பயன் படுத்துங்கள். எல்லாவற்றையும் முழுமையாக நீக்க வேண்டும் என்பது மிகவும் முக்கியம். இதுவே முழுமையான நிவாரணத்தை உறுதிபடுத்தும்.

சீப்பு பிரஷ் அல்லது முடி சம்மந்தமான பொருட்களை சுடு நீரில் (கொதிக்க விடவேண்டாம்) 10 நிமிடம் ஊறவிடுங்கள்.

நீண்ட முடியிருந்தால், பேன் தொற்றியுள்ள சமயம் அதை ஒரு சேர முடிந்து வைக்க வேண்டும்.